# இந்தியா @ 75

**சி. கே. பிரஹலாத்**
*பால் & ரூத் மெக்கிராக்கென் பல்கலைக்கழக பேராசிரியர்,*
*ரோஸ் வர்த்தக பள்ளி*
*மிசிகன் பல்கலைக்கழகம்*

*நியூயாக்கில் இந்தியா@60 விழாவில் நிகழ்த்தப்பட்ட உரை*
செப்டம்பர் 23, 2007

# இந்தியா @ 75

**சி. கே. பிரஹலாத்**
*பால் & ரூத் மெக்கிராக்கென் பல்கலைக்கழக பேராசிரியர்,*
*ரோஸ் வர்த்தக பள்ளி*
*மிசிகன் பல்கலைக்கழகம்*

*மிக்க நன்றி தரூண். ஆம்! இந்தியா@60 என்பதில் நாம் ஒரு மிகப் பெரிய காரியத்தை முடித்திருக்கிறோம், அதை நாம் கொண்டாடியே ஆக வேண்டும். நியூயார்க்கில் நாம் ஓர் உற்சாகமான வாரத்தை கொண்டிருக்கிறோம் என்பதை நான் அறிவேன். கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, அடுத்து என்ன? என்ற ஒரு கேள்வியை நமக்கு நாமே கேட்டுக் கொள்ள வேண்டும் என நான் அறிவுறுத்துவேன். இந்தியா@60 என்பதை நாம் கொண்டாடும் போது, கடந்த காலத்தில் நாம் நிறைவேற்றியிருக்கும் அனைத்தையும் நாம் நினைவுபடுத்தி பார்க்க வேண்டும். எவ்வாறிருப்பினும், தலைமை என்பது எதிர்காலத்திற்குரியது, அது மாறக்கூடியது. தலைமை என்பது நம்பிக்கை அடிப்படையிலானது. எனவே நான் கடந்த 60 ஆண்டுகளிலேயே நின்று விட விரும்பவில்லை, நான் எதிர்காலம் குறித்து பேச விரும்புகிறேன். நான் இந்தியா@60 என்பதற்கு பதிலாக இந்தியா@75 என்பதில் கவனம் செலுத்த விரும்புகிறேன். முதல் 60 ஆண்டுகளில் கிடைத்த நமது வெற்றியின் அடிப்படையில், அடுத்த 15 ஆண்டுகளில் நாம் எவற்றை நிறைவேற்ற வேண்டும் என்பது குறித்து பேச விரும்புகிறேன்.*

*ஒரு துடிப்புள்ள இந்தியா@75 கட்டமைப்பிற்கான ஒருவரின் முன்னோக்கு சிந்தனை, ஒருவரின் கருத்துக்கள் மற்றும் ஒருவரின் அணுகுமுறை குறித்து நான் உங்களோடு பகிர்ந்து கொள்வேன். இந்தியா@75 என்பது என்னவாக இருக்கும் என்பதில் இருந்து துவங்குகிறேன். மூல ஆதாரவளங்கள் குறித்து நாம் சரியாக புரிந்து கொள்ளாத வரை, ஒரு சிக்கலான பயணத்தைப் புரிந்து கொள்வது என்பதும் சிக்கலானதாகவே இருக்கும். வளர்ந்து வரும் உலக முறைமைகளை இந்தியாவால் துல்லியமாக வடிவமைக்க முடியும் என நான் நம்புகிறேன். இதற்காக போதிய <u>பொருளாதார பலம், தொழில்நுட்ப உள்ளூரம் மற்றும் நடுநிலையான தலைமையை</u> இந்தியா கொண்டிருக்க வேண்டும். பொருளாதார பலம் மற்றும் தொழில்நுட்ப முதிர்வு மட்டும் இதற்கு போதாது. சோவியத் ஐக்கியம் மற்றும் நாஜி ஜெர்மனி இரண்டும் போதிய பொருளாதார மற்றும் தொழில்நுட்ப பலத்தைக் கொண்டிருந்தன என்பதை நாம் அறிவோம். ஆனால் அவை தோல்வியடைந்தன. நடுநிலைமை என்பது தலைமைப்பண்பின் உள்ளடக்கமான ஒரு பகுதியாகும். இந்தியாவின் இலக்கை நோக்கிய அதன் பயணத்தின் அனைத்து மூன்று கோணங்களையும் சமமான விகிதத்தில் நான் விரித்து கூற இருக்கிறேன்.*

**இந்தியா@75 - மூல ஆதாரவளங்கள்:**

1. இந்தியா அதன் மக்கள்தொகையை ஒரு தெளிவான பயன்பாட்டில் திருப்பி கொண்டிருக்கிறது. எல்லா துறைகளிலும் படித்த மக்களை உருவாக்குவதற்கான ஒரு முன்மாதிரியாக, சுமார் 200 மில்லியன் கல்லூரி பட்டதாரிகளை உருவாக்கும் ஆற்றலை இந்தியா பெற்றிருக்கிறது. இது இந்திய மக்கள்தொகையில் வெறும் 16% மட்டுமே. கூடுதலாக 500 மில்லியன் சான்றிதழ் பெற்ற திறமை வாய்ந்த தொழில்நுட்ப வல்லுனர்களை நான் பார்க்க விரும்புகிறேன். இது எதிர்கால உலக கல்வியாளர்களின் எண்ணிக்கையில் உள்ளடக்கமாகும். இந்த இலக்கைத் தலைவர்கள் முதன்மையாக முன்வைப்பார்களேயானால், அடுத்த பதினைந்து ஆண்டுகளில் இது சாத்தியப்படும் (i). இது எதைக் குறிக்கிறது என்று சிந்தித்து பாருங்கள். சர்வதேசஅளவில் எங்கு பார்த்தாலும், தொழில்நுட்பரீதியாக பயிற்சி பெற்ற மனிதசக்தியை இந்தியா கொண்டிருக்கும். இதுவே உலக தலைமைக்கான துவக்கப்புள்ளியாக இருக்கும். அதன் கல்வி இலக்கில் இந்தியா தோல்வி அடைந்தால், இந்தியாவிற்குரிய எனது மீதமிருக்கும் நோக்கங்களைக் கைப்பற்ற முடியாது போய்விடும்.

2. பார்ச்சூன் 100 நிறுவனங்களில் குறைந்தபட்சம் முப்பது இடங்களிலாவது இந்தியா இடம் பெற்றிருக்க வேண்டும். இதுவொரு துணிச்சலான இலக்கு என்பதை நான் அறிவேன், ஆனால் அது சாத்தியப்படக் கூடியதேயாகும்.

3. சர்வதேச வர்த்தகத்தில் இந்தியா 10% பங்கு வகிக்கிறது. நாம் நமது மனநிலையை மாற்றிக் கொள்ள வேண்டும். உண்மையில், 1997ஆம் ஆண்டு ஆசிய நெருக்கடியால் இந்தியா பாதிக்கப்படாத போது, இந்தியா நிறைய பெருமைகளைத் தக்க வைத்துக் கொண்டது. இந்தியா உலகின் பிற பகுதிகளுடன் இணைக்கப்பட்டிருந்ததால் அதுவும் நெருக்கடியின் விளைவுகளை உணர்ந்தது என்பதால் அதுவொரு சோகமான விமர்சனம் என நான் அச்சமயத்தில் தெரிவித்தேன். இந்தியா நிச்சயமாக உலகின் பிற பகுதிகளுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் - இது பிறரிடம் செல்வாக்கைப் பெறுவதற்கான ஒரு முக்கிய படி என்பதுடன், மிக முக்கியமாக பிறரிடமிருந்து கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பும் உள்ளது.

4. புதிய தொழில்கள், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய வர்த்த முறைகளைக் கொண்ட சர்வதேச புதிய கண்டுபிடிப்புகளுக்கான மூலமாக இந்தியா விளங்குகிறது. முந்தைய ஆதாரம் ஏற்கனவே இருக்கிறது. மிகக் குறைந்த மூலதனம், மிகக் குறைந்த நிரந்தர செலவுகள் மற்றும் நிரந்தர செலவுகளை மாறும் செலவுகளாக மாற்றுவது (ஏர்டெல்லில் செய்யப்பட்டது போன்று) போன்ற புதிய தொழில் முறைகளுக்கான மையமாக இந்தியா தொடர்ந்து மாறி வருகிறது. எல்லாவற்றிற்கும் அடித்தளத்தில், புதிய பல கண்டுபிடிப்புகளுக்கு 800 மில்லியன் இந்தியர்கள் ஒரு முக்கிய ஆதாரமாக விளங்க முடியும்(ii).

5. கலைகள், விஞ்ஞானம் மற்றும் இலக்கியத்தை மலரச் செய்வதிலும் இந்தியா கவனம் செலுத்த வேண்டியுள்ளது. பத்து நோபல் பரிசு வெற்றியாளர்களை இந்தியா ஏன் கொண்டிருக்க கூடாது? வேறு எங்கோ செய்யப்பட்டதற்காக இந்தியர்கள் நோபல் பரிசு பெறுவதில்லாமல், இந்தியாவிலேயே செய்து அதை பெறுவது சிறப்புடையதாகும் என்று நான் கூற விரும்புகிறேன்.

6. எவ்வாறு மாற்று தொழில்களுக்கு ஈடுகொடுப்பது என்பதில் இந்தியா உலகிற்கு ஒரு முன்னுதாரணமாக விளங்கும். சர்வதேசமயமாக்கல் மற்றும் உள்ளடக்கியதன்மை ஆகியவற்றின் செயல்முறைகளுக்கான முன்னுதாரணமாகவும் அது விளங்கும். அனைத்து முக்கிய மதங்கள், 15 முக்கிய மொழிகள் மற்றும் நூற்றுக்கணக்கான பேச்சுவழக்கு மொழிகள் மற்றும் சிக்கலான கலாச்சாரங்கள், உணவு பழக்கவழக்கங்கள் மற்றும் சடங்குமுறைகளின் மையமாக இந்தியா விளங்குவதால், அனைத்து விதமான மாற்று முறைகளையும் இந்தியாவில் ஒரு நம்பலாம் என்பதுடன் அதற்கு அதற்கான வாய்ப்புகளும் உள்ளன. மாற்று முறைகள் மற்றும் உள்ளடக்குவதைப் பயிற்சி செய்ய இந்தியா ஓர் ஆய்வகமாக இல்லையென்றால், வேறெங்குமே அவ்வாறான வாய்ப்பு கிடைக்காது. *இந்தியா உலகிற்கான ஓர் ஆய்வகம்.*

ஒருவர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம். நிறைவேற்றப்படுபவைகளால் உலகில் இந்தியாவின் செல்வாக்கு மாறும் போது ஆறு பெரிய வாய்ப்புகளை நான் கண்டறிந்திருக்கிறேன். இந்தியா மூல வளங்களைக் கொண்டிருக்கிறது. இந்த மூல வளங்கள் உங்கள் ஆர்வத்தைத் தூண்டுகிறதென்றால், நாம் அடுத்த முக்கிய கேள்விக்கு செல்வோம்; அதாவது: நாம் எவ்வாறு அவ்விடத்தை அடைவது? மற்றும் நாம் எந்தெந்த கோட்பாடுகளுடன் துவங்க வேண்டும்?

### *முக்கிய கோட்பாடு*

நான் மூன்று கோட்பாடுகளை அறிவுறுத்த விரும்புகிறேன். முதல் ஒன்று, தொழல்முனைவு மாற்றத்தின் சாரம் தொடர்பானது. நம்மிடம் ஆதாரவளங்கள் இல்லாததால், இந்தியா@75ன் சாத்தியக்கூறுகளை நம்மால் உணர முடியாது என பலர் கூறுவார்கள் என்பதை நான் அறிவேன். ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் என நினைக்கிறேன், நான் 10% வளர்ச்சிக்கான இலக்கை முன்வைத்தேன். பத்து சதவீத வளர்ச்சிக்கான ஆதாரவளங்கள் நம்மிடம் இல்லை என சில மூத்த மற்றும் மிகவும் அறிவார்ந்த முதலாளி வகையினர் உட்பட இந்தியாவில் பலர் தெரிவித்தனர். ஆதாரவளங்கள் ஒரு பிரச்சனையே அல்ல, ஆனால் விருப்பங்கள் மற்றும் ஆதாரவளங்களுக்கு இடையிலான சமநிலையே பிரச்சனையாக உள்ளது. புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்முனைவு சக்தியை அளிக்கக் கூடிய விருப்பங்கள் மற்றும் ஆதாரவளங்களுக்கு இடையே இருக்கும் அறிவார்ந்த பொருத்தமின்மையை இந்த அறையில் உள்ள ஒவ்வொரு தொழில்முனைவோரும் அறிவர். ஒரு நாடு என்கிறரீதியில், இந்தியாவில் உயர்ந்த மற்றும் பகிர்வான விருப்பங்கள் இருக்க வேண்டும். காங்கிரஸ் கட்சி தலைவர்கள் 1929ல் *பூர்ண சுவராஜ்ஜியம்* என்கிற அவர்களின் விருப்பத்தை அறிவித்த போது ஒரு நாடு என்கிற அளிவில் கடந்த முறை இந்தியாவில் விருப்பங்கள் பகிர்ந்து அமைந்திருந்தன. அதற்கு பிறகு, ஒவ்வொரு இந்தியனும் விரும்ப கூடிய அளவில் இந்தியாவிற்கு ஒரு தேசிய விருப்பம் என்பது அமையவில்லை. ஒரு பகிர்ந்த

நிலையிலான விருப்பம் என்பது மாறும் இந்தியாவிற்கு மிகவும் அடிப்படையாகும். இருக்கும் ஆதாரவளங்களை விட அதிகமான ஒரு விருப்பத்தை உணர்ந்து கொள்ள இரண்டே இரண்டு வழிகள் மட்டுமே உள்ளன. ஒன்று, ஆதாரவளங்களை கருவியாக்குவது - அதாவது, நீங்கள் செலவிடும் ஒவ்வொரு ரூபாய்க்கும் மற்றும் ஒவ்வொரு நபருக்கும் நிறைய பெறுவது. இதற்கு மாற்றாக, ஒருவர் அதன் போக்கை மாற்றலாம் மற்றும் உங்களின் ஆதாயத்திற்கேற்ப அதை மாற்றலாம். அதுவே காந்தியின் புத்திகூர்மை. பிரிட்டிஷினருக்கு எதிராக பாரம்பரிய முறையில் ஆயுதங்களை ஏந்தி போராடாமல், அமைதியான சத்தியாகிரக முறையைப் பின்பற்றியது. இதற்கு சமமான முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கும் இரண்டாவது கோட்பாட்டை உணர்வது என்பது கடந்த 60 ஆண்டுகளில் அல்லது குறைந்தபட்சம் கடந்த 10 ஆண்டுகளில் நாம் என்ன செய்தோம் என்ற புள்ளிவிபரங்கள் மூலம் இந்தியா@75ன் சாத்தியக்கூறுகளை நம்மால் பெறமுடியாது என்பதை உணர்வதாகும்.

இங்கிருந்து (தற்போதைய நிலை) உங்களால் அங்கு (இந்தியா@75) சென்றடைய முடியாது. நான் முன்பே கூறியது போல, நீங்கள் இந்தியா@75 என்பதை கற்பனை செய்ய வேண்டும், பின்னர் அதை எதிர்காலத்தில் கொண்டு வரவேண்டும். கடந்த காலத்தின் புள்ளிவிபரங்களைச் சேகரிப்பதை விட எதிர்காலத்திற்கென செயல்படுவது தான் அடிப்படை. இந்தியா@75ன் சாத்தியக்கூறுகளை வரையறுத்து துவக்கியத்திற்கு இதுவே காரணமாகும். ஆனால் இங்கிருந்து நாம் ஒரு தாவலில் அங்கு சென்று விடுவோம் என்று பொருளாகாது. நாம் சரியான திசையில் சிறிய சிறிய அடிகளாக மற்றும் தெளிவான அடிகளாக எடுத்து வைக்க வேண்டும். சில அடிகள் பரிசோதனைக்குரியதாகவும் இருக்கலாம். நாம் சிறிய அடியை எடுத்து வைப்போம், ஆனால் விரைவாகவும், ஒரு நோக்கத்துடனும் நகர்வோம். மூன்றாவதாக, சிறந்த பயிற்சிகளில் மட்டும் கவனம் செலுத்த வேண்டாம். ஒவ்வொருவரும் மற்றவரை இலக்காக கருதும் போது, நாம் சாதாரண நிலைக்கு தள்ளப்படுவோம். எனவே அடுத்தக்கட்ட பயிற்சிகளில் கவனம் செலுத்துவதை நான் அறிவுறுத்துகிறேன். அதாவது, பலவீனமான நிலைகளை நாம் மேம்படுத்த வேண்டும், வாய்ப்புக்கான புதிய வடிவத்தைக் கண்டறிய வேண்டும் என்பதுடன் அவற்றைப் பின்தொடர்வதற்கான தைரியத்தையும் நாம் கொண்டிருக்க வேண்டும்.

இந்த மூன்று கோட்பாடுகளும் மிகவும் எளிமையானவை, ஆனால் ஒரு முறை என்கிற வரையில் இந்தியாவை புத்துயிரூட்ட இவை மிகவும் சக்தி வாய்ந்தவை. நாம் பின்வருவனவற்றிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்:

அ. விருப்பங்கள்> ஆதாரவளங்கள்

ஆ. எதிர்காலத்திற்காக செயல்படுவது

இ. அடுத்தக்கட்ட பயிற்சிகளில் கவனம் செலுத்துவது

இந்த கோட்பாடுகள் *இங்கே* மற்றும் *இப்பொழுது* என்கிற இரண்டின் அடிப்படையிலும் மற்றும் *எதிர்காலம்* குறித்தும் நிச்சயமாக மிகவும் வித்தியாசமாக நம்மை சிந்திக்க வைக்கிறது. அது நம்மை *முற்றிலும் மாறுபட்ட விதத்தில்* மேம்பாடு அடையச் செய்ய உந்துகிறது. இந்தியாவிற்கான ஒரு வலிமையான மற்றும் சக்திமிக்க எதிர்காலம் என்பது *ஒரு பகிர்வு முறையிலான கண்ணோட்டத்தில்* அல்லாமல் உருவாக்க முடியாது. அதிகரிப்புவாதம் நம்மை அங்கு கொண்டு செல்லாது. வெறும் உடனடி தீர்வுகளுக்கு மட்டும் நாம் முயற்சிக்க கூடாது. உலகில் ஒரு தலைவராக இருப்பதற்கான முக்கியத்தன்மை என்பது ஆக்கத்திறன், புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றால் ஆதரிக்கப்பட்ட விருப்பங்களுக்கான ஒரு பகிர்வு அடிப்படையிலான பொறுப்புணர்வு என்பதேயாகும்.

**மேம்பாட்டிற்குரிய சூழல்**

எந்த சமூக-அரசியல் மற்றும் பொருளாதார சூழலில் நாம் இதை நிறைவேற்ற உள்ளோம்? அடுத்த 10 அல்லது 15 ஆண்டுகளில் இந்தியாவில் பொதுவிவாதங்கள் விரைவாக மாறும் என்று நான் நம்புகிறேன். இந்தியா அதன் மூல ஆதாரவளத்தை உணர அதன் பொதுவிவாதத்தின் போக்கு மற்றும் அதன் தீர்மானங்கள் எந்த திசையில் அவசியப்படுகிறது என்பதை நான் ஆறு பிரிவுகளில் கண்டறிந்திருக்கிறேன். அவை பின்வருவனவாகும்:

1. வறுமையை வருமான சமநிலையின்மைக்கு மாற்றுதல்
2. வாழ்க்கைமுறை அளவுகளின் அடிப்படையில் வருமான அளவுகளை மாற்றுதல்: அதாவது உலகளவிலான விருப்பங்களின் அடிப்படையில்.
3. விலை நிர்ணய முறையை மாற்றுதல்
4. குறைந்த தொழில்நுட்ப தீர்வை சர்வதேச அணுகுமுறைக்கேற்ப உயர்தொழில்நுட்ப தீர்வுகளுக்கு மாற்றுதல்
5. வாழ்க்கை சூழலுக்கேற்ப உற்பத்திகள் மற்றும் வேலைவாய்ப்புகள் அளித்தல்
6. அரசாட்சியின் மீது கவனம் செலுத்துதல்

முக்கியமாக, பெரியளவிலான பொருளாதார அபிவிருத்தி மற்றும் இந்தியா போன்ற சிக்கலான மற்றும் பெரிய பன்முக நாடுகளில் ஒரு புதிய முறையை ஏற்படுத்துவதற்காக இந்த கேள்விகள் எடுக்கப்பட்டன. இந்த மேம்படுத்தப்பட்ட முறை இதற்கு முன்னால் இதுபோன்ற பெரிய அளவில் வேறெங்கும் முயற்சிக்கப்படவில்லை என்பதால் இதை அடுத்தக்கட்ட பயிற்சி என சிறப்பாக குறிப்பிடலாம். இந்தியாவின் திறன்களை ஆழமாக பயன்படுத்தும் விதமாக (சுதந்திர இயக்கத்தில் நாம் செய்தது போல) வெளியில் எங்கும் முறைகளைத் தேடாமல் (சிறந்த பயிற்சிகளை இலக்காகுதல்) இந்தியாவிற்குள்ளேயே பார்க்கலாம் என்பதால் அது நம்மை எழுச்சியூட்டும். பொருளாதார அபிவிருத்திக்கான அடுத்தக்கட்ட பயிற்சிமுறைகளைக் கண்டறிய வேண்டிய தேவை நமக்கு உள்ளது.

இந்தியாவின் அடுத்தக்கட்ட வளர்ச்சிக்கான சுழலை அளிக்கும் ஒவ்வொரு பெரியளவிலான போக்குகளையும் நான் கீழே ஆய்வு செய்திருக்கிறேன்.

### 1. *வறுமையில் இருந்து சமநிலையற்ற வருமானத்திற்கு மாறுதல்:*

இந்தியா கடந்த பத்தாண்டுகளில் தனது மோசமான வறுமையைப் படிப்படியாக குறைத்துக் கொண்டிருக்கிறது. எவ்வாறிருப்பினும், இந்தியாவில் இன்னும் 380.6 (iii) மில்லியன் மக்கள் நாளொன்றுக்கு 1 டாலருக்கும் குறைவான வருமானத்தில் வாழ்ந்து வருகிறார்கள். "மோசமான வறுமை" என்பதை நாளொன்றுக்கு 1 டாலருக்கும் கீழ் வருமானம் பெற்று உயிர் வாழ்வதற்கான அடிப்படை "பிழைப்பாதாரமாக" வரையறுத்து அதை அடுத்த 15 ஆண்டுகளில் குறைக்க நினைப்பது பாதுகாப்பானதாகும். இந்தியா@75ல் மோசமான வறுமை என்பது ஒரு முக்கிய பிரச்சனையாக இருக்க கூடாது. எவ்வாறிருப்பினும், ஒரு பெரிய சிக்கலான பிரச்சனை அந்த இடத்தில் உருவாகும். விரைவான பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதார உலகமயமாதலினால் ஏற்படும் ஒரு முக்கிய விளைவு என்னவென்றால் *கிடைக்கும் பலன்களில் பின்னடைவுகளும் மற்றும் இசைவின்மையும் இருக்கும்.* சமுதாயத்தின் சில பிரிவுகள் பலனடையும் (தகவல் தொழில்நுட்ப துறையில் பணிபுரிபவர்கள் போன்றவர்கள்) மற்றும் சிலர் (கிராமப்புறங்களில் உள்ள கல்வியறிவில்லாத கூலியாட்கள்) பின்தங்கி இருப்பார்கள். இந்த ஒத்த இசைவின்மையானது சமுதாயத்தில் பல புதிய பிரிவுகளை உருவாக்கும். அதாவது கற்றவர்கள் மற்றும் கல்லாதவர்களுக்கு இடையிலும், நகர்புற மற்றும் கிராமப்புற மக்களிடையேயும், நாட்டின் பிராந்தியங்களிடையேயும் மற்றும் இன குழுக்களிடையேயும் பிரிவுகளை ஏற்படுத்தும். கிடைக்கும் விளைவுகளில், சமமற்ற வருமானம் என்பது சமுதாய பதற்றத்தின் ஒரு ஆதாரமாக உருவெடுக்கும். இது இந்தியாவைப் பொறுத்த வரை மட்டுமல்ல. பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் சீனா, பிரேசில் மற்றும் தென்னாப்ரிக்கா போன்ற நாடுகளிலும் ஏற்படும் என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அமெரிக்காவைப் போன்று பெரியளவிலான பொருளாதார நாடுகள் படிப்படியான மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளும் என்பதும் உண்மையே. கினி கெழுவால் அளக்கப்பட்ட வளர்ந்து வரும் சமநிலையின்மையைப் பின்வரும் அட்டவணை விளக்குகிறது.

| **சமநிலையின்மையின் முறைமைகள்:** |
|---|

| கினி கெழு: | | | | | |
|---|---|---|---|---|---|
| | அமெரிக்கா | சீனா | இந்தியா | பிரேசில் | தென் ஆப்ரிக்கா |
| 1985-1986 | 41.6 | 22.4 | 32.0 | 59.3 | |
| 1989-1991 | 42.7 | 34.1 | 32.1 | 64.0 | |
| 1995-1996 | 45.0 | 39.0 | 33.8 | 60.2 | |
| 1999-2001 | 46.3 | 42.0 | 36.0 | 59.6 | |
| 2006 | 46.9 | 47.0 | 39.5 | 57.2 | 59.0+ |
| GNI/capita PPP | $43,555 | 7,600 | 3,800 | 8,600 | 13,000 |
| மனிதவள பட்டியலில் 200வது இடம் (177) | 8 | 81 | 126 | 69 | 121 |

படிப்படியான பொருளாதார அபிவிருத்தி மற்றும் பொருளாதாரத்தில் அமைப்பில் ஏற்படும் அடிப்படை மாற்றங்களின் விளைவுகளால் வருமான சமநிலையின்மை உருவாவதை நம்மால் காண முடியும். அமெரிக்காவும் கூட இதிலிருந்து காப்பு பெற முடியாது. சமநிலையின்மை வருமானத்தின் ஒரு முறைமையை மட்டும் நாம் கவனத்தில் கொள்வோமேயானால், இந்தியா மிகவும் மோசமாகத் தோன்றாது. ஆனால், சமநிலையின்மை அளப்பதற்கு வாய்ப்பாகவுள்ள மூலதனத்திற்கும் வருமானத்திற்கும் உள்ள விகிதம் (வாங்கும் சக்தியின் அடிப்படையில் அளக்கப்பட்டது) (உண்மையான உள்ளூர் மக்களின் வாங்கும் சக்தியை பிரதிபலிக்கிறது) மற்றும் மனிதவள பட்டியல் ஆகிய இரண்டையும் கவனிக்க வேண்டும். இந்த இரண்டு கோணங்களிலும், இந்தியா கடைசி நிலையில் இருக்கிறது. ஆச்சரியத்திற்கிடமின்றி, இது ஏனென்றால், இந்தியாவில் மக்கள் ஓய்வின்றி இருக்கிறார்கள். இந்தியா சிந்தனைவாத கலப்புடன் தொடர்பு பட வேண்டும்.

அ. குறைவான மூலதன வருமானம்

ஆ. அதன் மனிதவள ஆற்றலை மேம்படுத்துவதில் பின்தங்கிய நிலை - அதாவது சிறந்த வாய்ப்புகளுக்கு அழைத்து செல்லும் கல்வி மற்றும் ஆரோக்கியம்.

இ. ஒத்த இசைவற்ற பலன்களை (சமநிலையற்ற வருமானத்தை) உருவாக்கும் ஒரு சுற்றுச்சூழல்

ஈ. நிறைய இளைஞர்களை இந்தியா கொண்டிருக்கிறது. இருபத்தி ஐந்து வயதிற்கும் குறைவானவர்கள் 52.3 (iv) சதவீதத்தினருக்கும் மேலாக உள்ளனர். 2025ல் கூட, நம் நாடு இளைஞர்களின் நாடாகவே இருக்கும்.

2025ல், இருபத்தி ஐந்து வயதிற்கும் குறைவானவர்கள் இந்தியாவில் 41.8[1] சதவீதம் இருப்பார்கள்.

இந்த *பிரச்சனைகளின் கலவையை* நாம் எவ்வாறு எதிர்கொள்ள போகிறோம் என்பதை இந்தியா பிரதிபலிக்க வேண்டும். வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் மற்றும் *வருமான மாற்றம்* - மற்றும் *நம்பிக்கையை அளிப்பது* ஆகிய பொருளாதார படிநிலைகளில் உயர மக்களுக்கு வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் வறுமையை நீக்குவதில் இந்தியா கவனம் செலுத்த வேண்டுமா? அல்லது *வருமான சமநிலையின்மையைக்* குறைப்பதில் அரசு கொள்கைகள் கவனம் செலுத்த வேண்டுமா? இதில் முதலாவதாக, *வறுமைக்கிடையிலான தூரம் (வருமானத்தின் அளவு), வாய்ப்பின்மை (வருமான மாற்றம்) மற்றும் வருமான சமநிலையின்மை* ஆகியவை தெளிவாக்கப்பட வேண்டும் என நான் நம்புகிறேன். இந்திய பொது விவாதங்கள் இந்த முரண்பாடுகளைக் கலையாது. அதற்கு மாறாக, நாம் தீர்க்க வேண்டிய பிரச்சனைகளில் நமது கருத்துக்கள் துல்லியமாக ஒருமுகப்படாது போய்விடும். என் முன்னுரிமை என்னவென்றால், நாம் இதுவரை செய்ததை விட மிக விரைவாக வருமான மாற்றத்தை உருவாக்க வேண்டும். இது கல்வி மற்றும் திறன்களை மேம்படுத்துவதில் ஓர் ஆழ்ந்த பொறுப்புணர்விற்கு நம்மை எடுத்து செல்கிறது. இது வெறும் வளர்ச்சியை (10 சதவீதத்திற்கும் மேலாக) மட்டும் அல்லாமல் வேலைவாய்ப்புகளையும் (எதிர்வரும் காலத்தில் ஆண்டொன்றுக்கு 10 மில்லியனுக்கும் மேலாக) (v) உருவாக்குகிறது. வருமான மாற்றம் என்பது வருமான சமநிலையின்மையால் உருவாகும் சமூக பதற்றங்களுக்கான ஒரு முக்கிய மாற்று மருந்தாக இருக்கும். பணக்காரர்கள் மீதான வரிகள் மற்றும் ஏழைகளுக்கான மானியங்கள் என்ற பழைய அணுகுமுறைக்குப் பின்னோக்கிச் செல்வதன் மூலம் வருமான சமநிலையின்மையைக் குறைப்பது என்பது இதற்கு பதிலாகாது. நாம் வருமான சமநிலையின்மையைக் கொண்டிருக்கிறோம் என்பதற்காக ஒவ்வொருவரையும் ஏழையாக மாற்றுவதற்காக நாம் மீண்டும் கம்யூனிசம் அல்லது சோசலிச கோட்பாட்டிற்கு திரும்புவதை விரும்பக்கூடாது. *உயர்ந்த வருமான மாற்றத்தை மற்றும் குறைவான வருமான சமநிலையின்மையை அளிக்க கூடிய விரைவான பொருளாதார வளர்ச்சியே நமக்குத் தேவை.*

இந்த பொதுவிவாதம் வேறுபட்ட வழிகளில் பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக, உலகமயமாக்கல் என்பது ஏழைகளுக்கு நன்மை தருவதா அல்லது தீமை தருவதா என்று என்னிடம் அடிக்கடி கேட்கப்படும். அதுவொரு தவறான கேள்வி என்று நான் பதிலிளிப்பேன். நாம் கேட்க வேண்டிய கேள்வி என்னவென்றால், *உலகமயமாக்கலை அனைவருக்கும் பயன்படும்படி எவ்வாறு செய்வது?* என்பது தான். நாம் எவ்வாறு பதிலைப் பெற விரும்புகிறோம் என்பதற்கு நாம் எவ்வாறு கேள்வியைக் கேட்கிறோம் என்பது மிகவும் முக்கியமாகும். உலகமயமாக்கல் என்பது புவிஈர்ப்பு சக்தியைப் போன்றது. புவிஈர்ப்பு சக்தியை *<u>மறுப்பதில்</u>* எந்த பயனும் இல்லை. நாம் புவிஈர்ப்பு சக்தியை *<u>எதிர்த்து</u>* நின்று ஒரு

விமானத்தை உருவாக்க வேண்டும். <u>உள்ளார்ந்த வளர்ச்சி என்பது சலுகைகளில் கிடையாது. அது நிரந்தரமான வாய்ப்புகளை உருவாக்குவதில் இருக்கிறது.</u> இந்தியா மற்றும் சீனா இரண்டும் விரைவான வளர்ச்சியைக் கண்டு வருகின்றன என்பதுடன் உள்ளார்ந்த வளர்ச்சி (இந்தியா) மற்றும் முரண்பாடற்ற சமுதாயத்தை (சீனா) படைப்பதற்கான தீர்வுகளுக்காக இரண்டும் போராடி வருகின்றன. இந்தியா இந்த பிரிவில் புதியவைகளைக் கண்டறிய வேண்டும்.

## 2. *வருவாய் அளவுகளில் இருந்து வாழ்க்கைத் தரத்திற்கு மாற்றுதல்: பொதுவான விருப்பங்கள்:*

மூலதன வருமானம் கல்வி அபிவிருத்தி மற்றும் சிந்தனையில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பது குறித்து விவாதிக்கும் போது, மக்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் மற்றும் அவர்களின் நம்பிக்கை என்ன என்பதிலும் கொஞ்சம் வெளிச்சத்திற்கு வருகிறது. மனிதகுல வறுமையைப் பொறுத்த வரை மக்களின் ஆசைகளும் அதன் பின்னனியில் ஒரு முக்கிய இடத்தைப் பிடிக்கிறது. நாளொன்றுக்கு 2 டாலர் என்ற ஒரு வாழ்க்கையை ஓர் உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். ஒரு ஆணோ அல்லது பெண்ணோ யாரும் தனியாக வாழ்வதில்லை. மக்கள் குடும்பமாக வாழ்கிறார்கள். ஐந்து நபர்கள் கொண்ட ஒரு குடும்பத்தை நாம் எடுத்துக் கொண்டால், நாளொன்றுக்கு 2 டாலர் என்பது நாளொன்றுக்கு 10 டாலர் என்பதாகிறது, ஆண்டுக்கு ஒரு குடும்பத்திற்கு 3,650 டாலர் என்பதாகிறது. அதாவது ஒரு குடும்பத்திற்கு ஆண்டுக்கு ரூ. 146,000 என்பதாகும். இந்தியாவில் நாளொன்றுக்கு 2 டாலர் பெற்று வாழ்பவர்கள் தான் நுகர்பொருள் வளர்ச்சியில் கணிசமாக பங்கு வகிக்கிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும். இரண்டு சக்கர வாகனங்கள், செல்பேசிகள், தனிநபர் தேவைக்கேற்ற பொருட்கள், ஐவுளிகள், தனியார்த்துறை சுகாதார தயாரிப்புகள் மற்றும் கல்வி ஆகியவைகளின் வளர்ச்சி இந்த குடும்பங்களில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்தியாவில் வருமான மாற்றம் மற்றும் சமநிலையின்மையை அளவிட நமக்கு தோராயமானதொரு அளவுகோல் தேவைப்படுகிறது. அது வருமானமா அல்லது வாழ்க்கை முறையா? உதாரணமாக, மும்பையிலுள்ள ஒரு சேரி பகுதியான தராவியில் நாம் நடக்கும் போது, குடிசையில் வாழும் மக்களும் ஒரு வண்ண தொலைக்காட்சி பெட்டி வைத்திருப்பதை நாம் பார்க்கலாம். அவர்கள் ஒரு குக்கர், ஒரு செல்பேசி, ஒரு இஸ்திரி பெட்டி, ஒரு மின்விசிறி மற்றும் ஒரு சிறிய பிரிட்ஜ் கூட வைத்திருக்கலாம். அவர்களின் வாழ்க்கை முறை மேல்பக்கம் என்ன தெரிகிறதோ அதிலிருந்து மிகவும் வேறுபட்டது. நவீன முறையிலான கழிவு வெளியேற்றம், குடிநீர் அல்லது கழிவறை போன்றவை இல்லாத ஒரு சேரி அது. அப்படியானால், வாழ்க்கை முறை அளவீடு என்பது எதைக் குறிக்கிறது மற்றும் நாம் ஏன் அதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்? அடுத்த 20 ஆண்டுகளில் 30 முதல் 35 சதவீத இந்தியா சேரிகளில் வாழும். அவர்களை நாம் நெருக்கமான மக்கள்தொகை பிரிவுகளில் குறிக்கலாம். இந்தியாவின் இரண்டாம் மற்றும் மூன்றாம் தர நகரங்களில் கூட விரைவான

நகர்புறமயமாக்கல் செய்யப்படுவதற்கான தேவை உள்ளது. முக்கிய சமூக பிரச்சனைகளைத் தீர்க்க இந்த அபிவிருத்திகள் புதிய வாய்ப்புகளை அளிக்குமா அல்லது அவைகள் இதை மேலும் சீரழிக்குமா?

மக்கள் சிறிய நகரங்களுக்கோ அல்லது பெரிய நகரங்களுக்கோ வரும் போது, அவர்களின் ஆசைகள் அதற்கேற்றபடி மாறிவிடுகின்றன. அவர்கள் பணக்காரர்களை தங்களின் இலக்காக கருதுகிறார்கள். அவர்கள் விளம்பர பலகைகள், தொலைக்காட்சிகள் மற்றும் பிற ஊடகங்களால் நிறைய வாழ்க்கை முறை தகவல்களைப் பெறுகிறார்கள். ஆனால் அவர்களின் ஆசைகளுக்கு ஏற்ப அவர்களின் வருமானம் விரைவாக மாறுவதில்லை. இதனால், அதிகரிக்கும் ஆசைகள் மற்றும் அவர்களின் ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்கான வருமானத்திற்கிடையில் ஒரு பின்னடைவு ஏற்படுகிறது, அதுவே சமுதாய எழுச்சியின் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு இட்டு செல்கிறது. சமுதாய பதற்றங்களின் முக்கிய ஆதாரமாக விளங்கும் *வாழ்க்கைமுறை சமநிலையின்மையில்* கவனம் செலுத்துமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். வருவாய் சமநிலையின்மை மட்டும் பிரச்சனையில்லை, வாழ்க்கைமுறை சமநிலையின்மையும் முக்கிய பிரச்சனை என்பதை நாம் கருதினால், இந்த பிரச்சனைக்கான தீர்வு நமக்கு கிடைக்கும்.

### *3. விலை நிர்ணய முறையை மாற்றுதல்:*

குறைந்த வருமானம், நிறைய ஆசைகள் மற்றும் வருமான சமநிலையின்மை ஆகியவற்றின் கலவையான பிரச்சனைகள் ஒருவருக்கு சிறிதளவு நம்பிக்கை இழப்பை அளிக்கலாம். ஒரு சேர இருக்கும் இந்த பெரிய பிரச்சனைகளை நாம் எவ்வாறு சமாளிப்பது? அதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவே நான் நம்புகிறேன். அனைத்து தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கான விலை நிர்ணய அளவுகளின் அடிப்படை மாற்றத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டும். நன்கு வடிவமைக்கப்பட்ட துறைகளான - தனியார்துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் முதன்மையாக பணக்காரர்களுக்காக தங்களின் தயாரிப்புகளை மற்றும் சேவைகளை மேம்படுத்துகின்றன. நுகர்வோர் மற்றும் தயாரிப்பாளர்களுக்கான அடுக்கின் அடித்தளத்தில் உள்ள ஏழைகள், பெரும்பான்மையான வடிவமைக்கப்பட்ட துறைகளின் பார்வைக்கும் கீழாக இருக்கிறார்கள். ஆகவே, தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கான விலை நிர்ணய முறையை (மதிப்பை) வடிவமைத்தால் நமக்கு பின்வரும் படத்தில் உள்ளது போன்ற சூழலைப் பெறுவோம்.




பாரம்பரிய நிலையில், ஏழைகள், நடுத்தர வகுப்பினர் மற்றும் பணக்காரர்கள் ஆகியோர் முக்கிய பிரிவினராக காணப்படுகிறார்கள். தயாரிப்புகள் மற்றும் சேவைகள் பல்வேறு செயல்பாட்டு பண்புகளின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன. செயல்பாடு, உணர்வு மற்றும் கலைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் அவற்றின் திறன் வேறுபடுகின்றன. திறனின் அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உங்களின் தோலை பாதிக்கும் சோப்பு ஏழைகளால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. பண்டைய எரிபொருளான உயிரிகழிவில் சமையல் செய்வது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கிராம மக்களுக்கு திரவ எரிவாயு தேவையாக இல்லை. நாம் ஏழைகள் பிரிவில் இருந்து பணக்காரர்கள் பிரிவிற்கு நகரும் போது அங்கு கண்ணுக்குத் தெரியாத, ஆனால் விலை நிர்ணயத்தின் இடைதொடர்பு இருப்பதை உணரலாம். ஏழைகள் நுகர்வோர்களாக அதிகரித்திருப்பது என்பது இந்த விளக்கத்தை தெளிவாக வெளிச்சமிட்டு காட்டுகிறது. செயல்பாட்டு திறம் மற்றும் உணர்வு தரத்தை இழக்காமல் புதிய நுகர்வோரின் வாங்கும்தன்மையானது மதிப்பு சமன்பாட்டை மாற்றி இருக்கிறது. 30 டாலரில் கண் அறுவை சிகிச்சை, 30 டாலரில் செல்பேசி, 0.01 டாலரில் ஷாம்பூ, 2,500 டாலரில் கார், 100 டாலரில் கணினி, 25 டாலரில் ஓட்டல் அறை ஆகிய அனைத்தும் மாறும் மதிப்பு சமன்பாட்டின் விளங்கங்களே. இது மேலும் அதிகரிக்கவே செய்யும். வாழ்க்கைமுறையை சமநிலைக்கு கொண்டு வருவதற்கான அதிகரித்து வரும் திறன் என்பது அதிகரித்து வரும் வருமான சமநிலையின்மைக்கு ஒரு மாற்று மருந்தாக அமையும். இந்த போக்கு உயர்தொழில்நுட்ப சந்தையின் மாறி வரும் தன்மையால் மேலும் ஊக்குவிக்கப்படலாம்.

### 4. குறைந்த தொழில்நுட்ப தீர்வை சர்வதேச அணுகுமுறைக்கேற்ப உயர்தொழில்நுட்ப தீர்வுகளுக்கு மாற்றுதல்:

உயர்தொழில்நுட்ப உட்பொருட்களின் திறன் அபிவிருத்திகளில் ஏற்படும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பின்வரும் அட்டவணை 3 பட்டியலிடுகிறது:

**யாரும் எதிர்பார்க்காத அளவிற்கு விலை நிர்ணய முறைகள் மிக விரைவாக மாறி வருகின்றன**

| | 1970 | 80 | 90 | 2006 |
|---|---|---|---|---|
| 1. டிரான்சிஸ்டர்/சிப் | $10^{3}$ | - | $10^{6}$ | $10^{9}$ |
| 2. நுண்ணிய உட்பொருட்களின் குறைந்து வரும் அளவு | - | $10^{-1}$ | - | $10^{-6}$ |
| 3. கணக்கிடும் திறன் | - | - | $10^{11}$ | $10^{15}$ |
| 4. ஒரு MIPயின் விலை ($1000) | - | - | 1 | 1M |
| 5.வரிசைப்படுத்துவற்கான செலவு (ஒரு இணைக்கான டாலர் மதிப்பு) | - | - | 10 | 0.05 |
| 6. காந்த தரவு சேமிப்பு (ஒரு டாலருக்கான பிட்கள்) | $10^{4}$ | - | - | $10^{11}$ |
| ஆதாரம்:ரே குர்ஜ்வெல் | | | | |

உயர் தொழில்நுட்பத்தில் மாறி வரும் ஒரு யூனிட் செயல்திறனுக்கான செலவு விகிதமானது, செல்பேசியாக இருந்தாலும் சரி அல்லது ஓர் ஐபாடாக (iPod) இருந்தாலும் சரி, ஏழைகளும் சமீபத்திய தொழில்நுட்பத்திலான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை பெற முடியும் என்பதை எடுத்து காட்டுகிறது. மேலும், கூகுள் வழங்குவதைப் போல, தகவல் பெறுவது போன்ற வளங்களின் புதிய பல ஆதாரங்களும் இலவசமாகி வருகின்றன. எனவே, இந்தியா போன்ற வளரும் சந்தைகளில் விலை நிர்ணயம் மீதான நெருக்கடியானது, உலகளாவிய அளவில் விலைகள் மீதான சரிவையும், விலை நிர்ணயங்களின் மீதான அடிப்படை சீரமைப்பையும் உருவாக்கும். பல துறைகளின் உதாரணங்கள் எடுத்துக்காட்டுவது போன்று இந்த நடைமுறை ஏற்கனவே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த வேகத்தில் எல்லோருக்குமான சமீபத்திய தொழில்நுட்ப தீர்வுகளை இந்தியாவால் ஏன் வழங்க முடியாது என்பதற்கு எந்த காரணமும் இல்லை. அதுவொரு நற்செய்தி தான். நிறைய மக்களால் பொருட்களை வாங்க முடியும். நிறைய மக்கள் தங்களின் வாழ்க்கைத் தரத்துக்கான ஆசைகளை அடைய முடியும். இந்த வாங்கும்திறனின் உயர்வால் வாங்கும் தன்மையில் பெரியளவிலான வளர்ச்சி ஏற்படும். இந்த பெரும் சந்தை வாய்ப்பானது

சுற்றுச்சூழலிலும் கணிசமான அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதுடன் சந்தையின் தேவைகளையும் அதன்மீது திணிக்கும்.

### 5. வாழ்க்கை சூழலுக்கேற்ப உற்பத்திகள் மற்றும் வேலைவாய்ப்புகள் அளித்தல்:

800 மில்லியன் இந்தியர்களுமே மைக்ரோ-நுகர்வோர்களும் மைக்ரோ-உற்பத்தியாளர்களுமாக ஆனால் என்ன நிகழும்? சுற்றுச்சூழல் தாக்கங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். அது நீர், எரிசக்தி, கழிவு மற்றும் பேக்கேஜிங், அல்லது நிலப் பயன்பாடு எதுவானாலும் சரி, ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் அமைப்புகளும் அழுத்தத்திற்குள்ளாகும். நிலைப்புத்தன்மை என்பது பல பரிமாணங்களைக் கொண்டது. இது வெறும் எரிசக்தி அல்லது குடிநீரைப் பொறுத்தது மட்டுமல்ல. வெறும் கழிவுபொருட்களைப் பொறுத்ததும் அல்ல. துரதிர்ஷ்டவசமாக, வண்டிகளில் வரும் நீரின் விலையானாலும் சரி, சமையலுக்காக சாணஎரிவாயுப் புகைகளால் வரும் நுரையீரல் பிரச்சினைகளானாலும் சரி, அல்லது பாதுகாப்பற்ற குடிநீரைப் பருகுவதால் வரும் வயிற்று உபாதைகளானாலும் சரி சுற்றுச்சூழல் அழுத்தங்கள் முதலில் ஏழைகளைத் தான் பாதிக்கிறது.

நுகர்வுதன்மை மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றின் விரைவான வளர்ச்சி, இந்தியாவில் மட்டுமின்றி, உலகெங்குமுள்ள சுற்றுச்சூழல் அமைப்புகள் மீது ஏற்படுத்தி இருக்கும் தாக்கத்தை புரிந்து கொள்வது நமக்கு மிகவும் சிக்கலானதாக இருக்கிறது (vi). சுற்றுச்சூழல் பாதிப்புகள் எல்லைக்கோடுகளை மதிப்பதில்லை. சுற்றுச்சூழல் அமைப்புகளின் பங்களிப்பை நாம் இரு தரப்பாகக் கருதலாம் - அதாவது, உணவு மற்றும் நீர் வழங்குவது. இதை வழங்குவது என பொதுவாகக் கொள்வோம். இரண்டாவதாக, இந்த இயற்கை மூலதனத்தை அல்லது இயற்கை வளங்களை நாம் எவ்வாறு நெறிப்படுத்துகிறோம் அல்லது எவ்வாறு பாதுகாக்கிறோம்? உதாரணமாக வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்வதாக இருக்கலாம். உதாரணமாக, மும்பையில், கழிவுநீர் அமைப்பினை மேம்படுத்துவதன் மூலம் பருவமழை காலங்களில் கன மழையை எதிர்கொள்ளமாறு செய்யலாம். மலேரியா போன்ற நோய்கள் பரவுவலைக் கட்டுப்படுத்தும் முறையை நாம் இன்னும் மேம்படுத்தலாம். காடுகள் அழிக்கப்படுவதை நாம் கட்டுப்படுத்தலாம். இறுதியாக, அழகிய ஏரிகள், பனி படர்ந்த மலைச் சிகரங்கள், மற்றும் கடல் போன்ற இயற்கையின் அழகிய கூறுகளை அனுபவிக்கலாம். இயற்கை வாழ்க்கைத் தரத்திற்கு சிறப்பு சேர்க்கும். உலக அளவில், மனித தனித்தன்மையானது இயற்கை செல்வத்தை மேம்படுத்துவதற்கான வழிகளைக் கண்டறிந்துள்ளது. ஒரு ஏக்கர் நிலத்தில் நிறைய உணவுப்பயிர்களை நாம் வளர்க்கிறோம். வழங்குவது இன்னும் மேம்படுத்தப்பட்டிருப்பதாக நாம் கூறிக் கொள்ளலாம். இருப்பினும், இயற்கை மூலதனத்தின் ஒழுங்கமைப்பு ஒரு கலவையான சித்திரத்தை நமக்கு காட்டுகிறது. வெள்ளம்,

வறட்சி, காடுகள் அழிப்பு, நிலம் மற்றும் நீரின் தரம் குறைவது இவையெல்லாம் அறிந்த நாம் விஷயங்கள் தான். இந்த விஷயங்களில் எல்லாம் இந்தியா மிக விரைவாக முடிவெடுக்கும் நிலைக்கு வர வேண்டும். மோசமான நெறிமுறை மற்றும் நடைமுறையால் இந்தியாவின் இயற்கை மூலதனத்திற்கு என்ன நிகழ்கிறது என்பதை படம் பிடித்துக் காட்டும் நிலப்படங்களையும், செயற்கைக்கோள் படங்களையும் உங்களுடன் என்னால் பகிர்ந்து கொள்ள முடியும். உடனடி கவனம் தேவைப்படும் பல பகுதிகளில், நான்கை மட்டும் இங்கு கூறுகிறேன்:

1) நீரின் தரம், அதன் இருப்பு மற்றும் அதை அணுகும் வசதி மற்றும் விவசாயம், தொழில்துறை மற்றும் வீட்டு உபயோகத்திற்கிடையிலான பயன்பாடு.
2) எரிசக்தி
3) காடுகள் அழிப்பு
4) சுகாதாரம். சுகாதாரம் என்பது நீர் மற்றும் எரிசக்தியுடன் நெருக்கமாகத் தொடர்புடையது

நிரந்தரமான வளர்ச்சியைப் பற்றி சிந்திக்காமல் ஏழ்மை ஒழிப்பு என்பது சாத்தியமற்றது, மேலும் அவ்விரண்டும் ஒன்றுக்கொன்று நெருக்கமாகத் தொடர்புடையவை. எரிசக்தி, தண்ணீர், பேக்கேஜிங், முதன்மையிலிருந்து வரும் கழிவு இவற்றுக்கான தற்போதைய மேம்பாட்டு முறைகள் பொருத்தமற்றவையாக உள்ளன என்பதால், அடிப்படையில் நாம் புதிய சிந்தனைகளை உருவாக்க வேண்டி இருக்கிறது. சுற்றுச்சூழலுக்கான "வெடிகுண்டாக" இந்தியா விளங்குகிறது. நகர்ப்புற இந்தியாவில் குடிநீர் தட்டுப்பாடு என்பது ஏற்கனவே ஒரு முக்கிய பிரச்சினையாக இருக்கிறது, மேலும் அது மோசமான நிலையை எட்டக் கூடும். எரிசக்திக்கான செலவும் ஏற்கனவே மிக அதிகமாக இருக்கிறது. ஆதாரவளங்களின் பயன்பாட்டின் இந்த போக்குகள் நிலைக்கக் கூடியதாய் இல்லை. ஆதாரவளங்களின் மேம்பட்ட பயன்பாட்டுக்கு நாம் வழிகாண வேண்டும், அத்துடன் சமையலுக்கான சிறந்த முறைகள், தொழில்துறை, விவசாயம் மற்றும் வீட்டு உபயோக தண்ணீர் பயன்பாட்டிற்கான சிறந்த விலை நிர்ணயம் மற்றும் ஒதுக்கீடு, அல்லது உயிரிசிதைவுக்குற்படாத பேக்கேஜிங் உட்பட கழிவுகளைக் குறைப்பதற்கான சிறந்த முறைகள் என இந்த விஷயத்தில் புதிய கண்டுபிடிப்புகளையும் நாம் ஆதரிக்க வேண்டும். ஒரு சிறந்த மற்றும் அனைத்து தரப்பினரையும் உட்சேர்த்த சமுதாயத்தை உருவாக்குவதில் மிகவும் முக்கியமான, வாங்கத்தக்க விலை நிர்ணய அளவுகள், வாழ்க்கை சூழலுக்கேற்ற விலை அட்டையுடன் தான் வரும் என்று நான் நம்புகிறேன். வாழ்க்கைச்சூழல் உணர்வுடன், தடையற்ற உள்ளார்ந்த வளர்ச்சியை உருவாக்குவதற்கான இதுபோன்றதொரு நிலையை உருவாக்குவதற்கான முன்நிபந்தனைகள் என்ன?

**6.** ***அரசாட்சி மீதான கவனம்:***

வாங்கும் திறனின் அடிப்படையில் மூலதனத்திற்கும் மொத்த தேசிய வருமானத்திற்குமான (GNI) விகிதம், மனிதவள பட்டியலில் ஒரு நாடு பெற்றுள்ள இடம் மற்றும் அரசாட்சி தரம் (அதாவது, ஊழலின் அளவு) ஆகியவற்றிற்கிடையிலான தொடர்புகளை ஆராய்வோம். இந்த தகவல் அனைத்து நாடுகளுக்கும் பொதுவாக கிடைப்பதாய் உள்ளது. உதாரணமாக;

- அ. வாங்கும் திறன் அடிப்படையில் மூலதனத்திற்கும் மொத்த தேசிய வருமானத்திற்குமான விகிதம் உலக வங்கியிடம் இருக்கிறது.
- ஆ. மனிதவள மேம்பாட்டு பட்டியல் UNDP -இல் இருந்து கிடைக்கிறது
- இ. ஊழல் அளவு பட்டியல் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்னேஷனலில் இருந்து கிடைக்கிறது

இந்த புள்ளிவிபரங்களைப் பயன்படுத்தி ஏழை நாடுகள் மற்றும் பணக்கார நாடுகள் இரண்டையும் பார்த்தால் நமக்கு பல சுவாரஸ்யமான தொடர்புகள் காணக் கிடைக்கின்றன.

- அ. மனிதவள மேம்பாட்டு பட்டியல் மற்றும் ஊழல் அளவு பட்டியல் ஆகியவற்றின் ஒரு ஆய்வானது, ஊழல் நிறைந்த நாடுகள் குறைந்த அளவிலான மனிதவள மேம்பாட்டைக் கொண்டிருப்பதை சுட்டிக் காட்டுகின்றன.
- ஆ. ஊழல் அளவு பட்டியல் மற்றும் வாங்கும்திறனின் அடிப்படையில் மூலதனத்திற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குமான விகிதத்தை நீங்கள் பார்த்தால், ஊழல் நிறைந்த நாடுகள் பணக்கார நாடுகளாக இல்லை. ஊழல் நிறைந்த நாடுகளில் இருக்கும் சிறு துணைப் பிரிவுகள் வேண்டுமானால் செழிப்புடன் இருக்கலாமே தவிர, ஒட்டுமொத்தமாக அந்நாடு பணக்கார நாடாக இருக்காது.
- இ. மனிதவள மேம்பாட்டு பட்டியல் மற்றும் மூலதனத்திற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குமான விகிதத்தை எடுத்துப் பார்த்தாலும், இதே போக்கு தான் தென்படும். நீங்கள் மனிதவளங்களில் அதிகம் முதலீடு செய்தால், நாடு அதிக செழிப்புடன் திகழும்.

இந்த தொடர்புகள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. இந்த தொடர்புகளில் இருந்து சில முக்கிய முடிவுகளை நாம் பெற முடியும். இந்தியாவில், மனிதவள மேம்பாட்டின் குறைந்த தரமானது ஆதாரவளங்கள் பற்றாக்குறையால் ஏற்பட்டதல்ல என்று ஒருவர் எளிதாகச் சொல்லி விடலாம். இது ஆதாரவளங்களை அவற்றிற்குரிய இடத்தில் நிலைப்படுத்துவதில் ஏற்படும் ஊழலின் அளவைப் பொறுத்ததாகும். நல்ல அரசாட்சி

அல்லது குறைந்த ஊழல் தான் உயர்ந்த அளவிலான மூலதனத்திற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான விகிதத்திற்கு எடுத்துச் செல்கிறது. இது தலைகீழாக நடக்காது. ஒரு நாடு முதலில் பணக்கார நாடாக ஆகிய பின், ஊழல் குறைந்ததாக ஆவது என்பது இயலாது. *செழிப்புறும் முன்பே ஒரு நாடு குறைந்த ஊழல் கொண்டதாக ஆகி விடுகிறது.* மனிதவள மேம்பாட்டின் மீது கவனம் செலுத்துவது என்பது செழிப்புறுவதற்கு மிகவும் அவசியமாகும். இந்த முடிவுகளில் எதுவும் திடீரென வராது. உள்ளுணர்வின் அடிப்படையிலேயே இவையெல்லாம் வெளிப்படையான விஷயங்கள் தான் ஆனால் உலகெங்கிலும் உள்ள புள்ளிவிபரங்களை நாம் பார்த்தால் நமது முடிவுகள் இன்னமும் உறுதிப்படுவதை நம்மால் உணர முடியும்.






2006ல், இந்தியாவின் மூலதனத்திற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குமான விகிதத்தையும், மனிதவள மேம்பாட்டு பட்டியலில் இந்தியா இருந்த இடத்தையும் (177 க்கு 126) நான் பார்த்தேன். மகிழ்ச்சியடையும் வகையில் எதுவும் இல்லை. நமது ஊழல் அளவு 3.3 (பத்துக்கு மிகவும் குறைவானதொரு நிலை, வெகு சில நாடுகள் மட்டுமே நம்மை விடக் கீழ்நிலையில் இருக்கின்றன). 2020 ஆம் ஆண்டுக்குள்ளாக ஊழல் அளவு மற்றும் மனிதவள மேம்பாட்டு பட்டியலின் இடம், இரண்டிலும் குறிப்பிடத்தக்க மேம்பாடுகளைக் காணுவதற்கு நமக்கு நல்ல வாய்ப்பு உள்ளது. அந்த காலத்திற்குள் பின்லாந்தின் இடத்தை இந்தியா எட்ட முடியாமல் போகலாம், ஆனால் ஊழல் விஷயத்தைப் பொறுத்த வரை ஒரு 7 புள்ளிகளையும் (அமெரிக்காவுக்கு சற்று அருகில்) மனிதவள மேம்பாட்டு குறியீட்டில் 175 க்கு 20 என்ற இடத்தையும் எட்டினால் கூட, நமது தனிநபர் வருமானம் என்பது பெருமளவில் உயரும். அதாவது வாங்கும் திறனின் அடிப்படையில் தற்போதைய நிலையான 3,800 டாலர் என்கிற நிலையில் இருந்து 25,000 டாலர் என்கிற நிலைக்கு உயரும் எனக் கணிக்கலாம். இதில் குறிப்பிடப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது மொத்தத்தில் 28.2 ட்ரில்லியன் டாலர் தொகையைக் குறிக்கிறது. ஊழலுக்கும், மனிதவளங்களை அலட்சியப்படுத்துவதற்குமாக நாம் கொடுக்கும் வெளிப்படையான, அளவிடத்தக்க

விலையானது நிலைகுலையச் செய்வதாக இருக்கிறது, இதுதான் தேசிய விவாதத்தின் மையப் பொருளாக இருத்தல் வேண்டும்.

ஊழல் மற்றும் மனிதவள மேம்பாட்டு குறியீட்டினை கையாள்வதில் நாம் பயன்படுத்த வேண்டிய வளைவுசுளிவுகள் கூடுதல் சட்டங்கள் குறித்தது அல்ல. சில அடிப்படை விஷயங்களில் மட்டும் நாம் கவனத்தை மையப்படுத்தப்படுத்தினால் போதுமானது என நான் நம்புகிறேன்.

அ. *சிந்தனை முறைகள்:* இந்தியாவைக் குறித்தும், அதன் எதிர்காலம் குறித்தும், அதன் வளர்ச்சி தேவைகள் மற்றும் தனிநபர் உரிமைகள் குறித்தும் நாம் சிந்திப்பதற்கு பயன்படுத்தும் சிந்தனை முறைகளை நாம் தீவிரமாக பரிசோதனைக்குட்படுத்த வேண்டிய தேவை உள்ளது

ஆ. *குழுக்களின் உரிமைகளுக்கெதிரான தனிநபர் உரிமைகள்:* ஒரு இந்தியனாக இருப்பதில் உள்ள உரிமைகளுடன் நெருக்கமாகத் தொடர்புடையது தான் தனிநபர் உரிமைகள் மீதான கவனம். இந்திய அரசியல் குழுக்களின் உரிமைகளை அடிப்படையாக கொண்டது. "உரிமைகள்" என்பதின் அடிப்படையான வரையறைகளை நாம் மறு-பரிசோதனை செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. நமது கவனம் தனிநபர் உரிமைகளின் பக்கம் மாற வேண்டிய தேவை இருக்கிறதா?

இ. *கோட்பாடுகள் அடிப்படையிலான தீர்வுகளுக்கு எதிராக புள்ளிவிபரங்கள் அடிப்படையிலான தீர்வுகள்:* நாம் இதுவரை மிக முக்கியமானவை என அடையாளம் கண்டுள்ள ஒவ்வொரு விஷயத்திலும் ஏராளமான புள்ளிவிபரங்கள் கிடைக்கின்றன. இருப்பினும், விவாதம் பெரும்பாலும் தத்துவரீதியானதாகவே இருக்கிறது. தகவல்கள் சிதைக்கப்படுகின்றன அல்லது அதைவிட மோசமாக பயன்பாடற்று கிடக்கின்றன. வரலாறு என்பதே முழுக்க முழுக்க தகவல்களினால் உந்தப்பட்ட யதார்த்தத்தின் மீது தத்துவங்களை அமர்த்தும் மனித விளைவின் உதாரணங்களால் நிரம்பியதாகவே இருக்கிறது. ஸ்டாலினின் அரசியல் சிறைகளிலோ அல்லது மாவோ பஞ்சத்தினாலோ இறந்த மில்லியன் கணக்கானோரும் இதில் அடக்கம். மோசமாக தெரிவிக்கப்பட்ட வாதங்களின் முன்நோக்கமற்ற எதிர்விளைவுகளில் இருந்து ஒரு தேசத்தைக் காப்பாற்ற வேண்டிய தேவை ஜனநாயகத்திற்கு இல்லை.

ஈ. *சடங்குகளுக்கு எதிரான கொள்கைகள்:* சிக்கலான முடிவுகளை எதிர்கொள்ளும் போது, "டை பிரேக்கர்களாக" இருந்து அடிப்படை கொள்கைகளை அணுக பின்னோக்கித் திரும்ப வேண்டும்.

உ. *சமூக நீதி என்பது பொதுவுடைமை அல்ல:* அனைவருக்கும் சமமாக வாய்ப்புகள் உருவாக்குவது என்னும் சமூக நீதியை, ஏற்றத்தாழ்வுகளை பொதுவுடைமைக் கொள்கை மூலம் நீக்குவதோடு குழப்பிக் கொள்ளக் கூடாது. பொதுவுடைமைக் கொள்கை என்பது ஒரு தத்துவம், சொத்து உருவாக்கத்துடன் சமூக சமத்துவத்தையும் சேர்த்து உருவாக்குவதில் எங்குமே இத்தத்துவம் வெற்றி பெறவில்லை.

ஊ. *செயல்திறனைக் கணக்கிடுதல்* : கணக்கிடுவதற்கான சிறந்ததொரு முறை நமக்கு தேவைப்படுகிறது. தொற்று நோய் மற்றும் வயிற்றுப் போக்கு நோயால் உயிரிழக்கும் குழந்தைகள் இறப்பு வீதம் ஆண்டுக்கு 2 மில்லியன் என்று இருக்கிறது. "அவசியமற்ற தடுக்கப்படக் கூடிய" இந்த இறப்புகளுக்கு யார் பொறுப்பு?

எ. *ஊழல் என்பது தேசத்துரோகம்.* தேசத்துரோகத்தைப் போன்றதொரு தீவிரத்துடன் எல்லா நிலைகளிலும் ஊழல் கையாளப்படாத வரை, மாற்றம் என்பது மிகவும் மந்தமானதொரு நடைமுறையாகத் தான் இருக்கும்.

ஏ. *ஆதாரவளங்கள் மீதான கவனத்திற்கு எதிராக தொலைநோக்குத் திறன் மீதான கவனம்.* நமது ஆதாரவளங்களை மிகவும் தாக்கமேற்படுத்தும் வாய்ப்புகள் மீது எவ்வாறு நிலைநிறுத்துகிறோம் என்பது வெறுமனே ஆதாரதளங்களின் அளவை விட கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கலாம்.

இந்த கொள்கைகள் இந்தியாவின் ஆளுகை கலாச்சாரத்தில் ஒரு ஆழமான மாற்றத்தையும், குறிப்பிடத்தக்க சுயபரிசோதனையையும் கோருவதாக இருக்கின்றன என்பதை நான் உணர்கிறேன். ஆனால் இது இந்தியாவை உருமாற்றும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் மிக முக்கியமானது என நான் நம்புகிறேன்

## *புதுமை பரிசோதனைப் பெட்டி*

இந்தியா@75ன் வளர்ச்சிக்கான கருத்துகளில் முக்கியமான உந்துசக்திகளை நான் அடையாளம் கண்டிருக்கிறேன். அவை தொடர்பு செய்வதெல்லாம் பரிதாபமான ஏழ்மையை அல்ல மாறாக வருமான ஏற்றத்தாழ்வு, வாழ்க்கைத் தரங்களை அங்கீகரிப்பது, நகரமயமாக்கல் மற்றும் உலகளாவிய இலட்சிய நோக்கங்களின் எழுச்சி, விலை நிர்ணய உறவுகளில் பெருமளவிலான மாற்றம், பொருளாதார வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் நெருக்கடி மற்றும் இறுதியாக அரசாட்சி மற்றும் சட்ட விதிகளின் பங்கு. என்னுடைய விவாதத்தில் உட்பொதிந்து இருப்பதும் இந்த நடைமுறையைப் புரிந்து கொள்வதற்கு முக்கியமானதாக இருப்பது அளவு தத்துவமாகும். இந்தியா போன்றதொரு 1.2 பில்லியன் மக்கள்தொகை கொண்ட பெரியதொரு நாடு, நாம் இதுவரை கற்பனை செய்திராத பெரிய அளவிலான நடவடிக்கைகளைக் கோருகிறது. இதேபோல, சந்தை அடிப்படையிலான தீர்வுகள் மீதும் நான் தெளிவான கவனச் செலுத்தி வருகிறேன். இந்த ஆய்வில் அளவு மற்றும் சந்தை இரண்டின் அடிப்படையிலான அணுகுமுறைகளும் உட்பொதிந்து இருக்கின்றன.

இந்தியா@75ன் முக்கிய கருத்துக்களை வழங்குவதற்காக நான் அடையாளம் கண்ட ஆறு விஷயங்கள் அலட்சியப்படுத்த முடியாதவை. அனைத்து வளர்ச்சியும் இந்த வரையறைகளைத் தழுவ வேண்டும் என்பதோடு, அவற்றை "சமரசத்திற்கு இடமில்லாமல்

கொள்ளத்தக்கவை" என்றும் கருத வேண்டும். இந்த வரையறைகளுக்கு உட்பட்டு நாம் புதுமைப் படைப்புகளை உருவாக்க வேண்டும். இந்த வரையறைகளின் முக்கியத்துவத்தை விளக்கப்படுத்தவே, புதுமை ஆராய்ச்சிப் பெட்டி அல்லது ஒரு உருவாக்க ஆராய்ச்சிப் பெட்டி என்னும் கருத்தை நான் உருவாக்கினேன். சமூக சமத்துவத்தின் மீதான கவனமானது, வருவாய் சமத்துவத்திற்கான தேவையை அங்கீகரிக்கிறது, சட்ட விதி வரையறையானது முன்னர் எழுப்பிய முக்கிய அரசாட்சி விஷயங்களைக் குறிப்பிடுகிறது, சுற்றுச்சூழல்ரீதியாக பராமரிக்கத்தக்க வளர்ச்சி வரையறையானது சுற்றுச்சூழல் உயிர்த்துடிப்பின் தேவையைக் குறிப்பிடுகிறது மற்றும் புதிய விலை நிர்ணய வரையறைகளானவை நாம் முன் விவாதித்த மாறும் விலை நிர்ணய முறையினைத் தெளிவாக உட்சேர்த்துக் கொள்கிறது. இந்த வரையறைகளுக்குள்ளாக நாம் செயல்பட முடியும் புதுமை படைக்க முடியும் என்று நமக்கு தெரியும். உதாரணமாக, விலை நிர்ணய முறையினை நாம் வெற்றிகரமாக உடைக்கிறோம். துரிதமாக பெரிய அளவுகளை எட்டுகிறோம். சந்தை அடிப்படை அமைப்புகளின் மதிப்பு உந்துவேகத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. சுற்றுசூழல் தேவைகள் குறித்தும் நாம் சில புரிதல்களுக்கு வந்திருக்கிறோம், அது போக்குவரத்தில் திரவ எரிவாயு (CNG) பயன்படுத்தும் விஷயமானாலும் சரி அல்லது மழைநீர் சேகரிப்பு விஷயமானாலும் சரி. அரசாட்சி மேம்பாட்டிலோ அல்லது சமூக சமத்துவத்தைச் சந்தை அடிப்படையிலான அமைப்புகள் வழி கையாளுவதிலோ, சட்ட விதிகளை அமலாக்குவதில் நாம் வெகு குறைவான முன்னேற்றமே கண்டிருக்கிறோம். கீழேயிருக்கும் பரிசோதனைப் பெட்டியானது இந்த அனைத்து தேவைப்பாடு அம்சங்களையும் ஒன்றாக வைக்கிறது, அத்துடன் அனைத்து புதுமைகள், கொள்கை முடிவுகள், மற்றும் முன்னுரிமைகள் இந்த ஆராய்ச்சிப் பெட்டிக்குள்ளாக செய்யப்பட வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. நான் சொல்வதெல்லாம் இந்த வரையறைகளை மீறாதீர்கள். இந்த வரையறைகளுக்குள்ளாக வேலை செய்யுங்கள். இந்த வரையறைகளுக்குள்ளாக நாம் புதுமை படைக்கும் வரை நாம் வெகு சிறப்பாக செய்வோம். அரசியல்வாதிகளானாலும் சரி, அதிகாரிகள், தொழிலதிபர்கள், அரசுசாரா நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட குடிமக்கள் - எல்லோருக்கும் அதே ஆராய்ச்சிப் பெட்டி தான். புதுமைகளுக்கான அணுகுமுறை மாறலாம் என்றாலும், எல்லைக்கோடு நிபந்தனைகள் அப்படியே தான் இருக்க வேண்டும்.




இந்த வரையறைகளை ஏற்றுக் கொள்வதில் ஒழுக்கத்துடன் செயல்பட்டு இந்த பரிசோதனைப் பெட்டிக்குள்ளாக அனைத்தையும் அமலாக்கினால், இந்த உரையின் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட இந்தியா@75ன் சாதிக்கும் திறன் சாத்தியமே. இந்தியாவின் எதிர்காலம் குறித்து எப்போதுமே நான் நம்பிக்கையுடனேயே இருக்கிறேன். 1989ல் இந்திய தொழிலக கூட்டமைப்பு மாநாடு ஒன்றில் நான் செய்த செயல் விளக்க உரையை நினைவு கூறி விட்டு முடிக்கலாம் என்று நினைக்கிறேன். 1989ல் இந்தியாவின் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்று நான் எண்ணியது கீழே காட்டப்பட்டுள்ளது:

## The Emerging World Order: My View in 1989




அந்த நேரத்தில் உலகின் தொழில்துறை வரைபடம் எப்படி இருந்தது என்று பார்த்தால், உலகளாவிய நிறுவனங்களும் இருந்தன, சிறு உள்ளூர் சந்தைகளும் இருந்தன. சிறு உள்ளூர் சந்தைகளுடனான பின்லாந்து, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, இதேபோல் அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளில் இருந்து தான் உலகளாவிய நிறுவனங்கள் தோன்றின. இருப்பினும், உலகளாவிய நிறுவனங்கள் மற்றும் உலக அளவு உள்ளூர் சந்தைகள் இரண்டின் பிரதிநிதித்துவத்திற்கும் சம மதிப்பளிக்கிறோம் என்று கூறத்தக்க வகையில் வெகு சில நாடுகளே இருந்தன. இந்தியா அந்த சமயத்தில் உலக நிறுவனம் எதனையும் கொண்டிருக்கவில்லை, உள்ளூர் சந்தையும் மிகச் சிறியதாக இருந்தது. என்னுடைய கணிப்பு எவ்வாறு இருந்ததென்றால், இந்தியாவும் சீனாவும் 2000ஆம் ஆண்டிற்குள்ளாக அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய தேர்ந்தெடுத்த நாடுகளின் பட்டியலுடன் சேரும் என்று. நாம் அந்த இடத்தை இன்னும் எட்டி விடவில்லை என்றாலும் சந்தேகமில்லாமல் அந்த இடத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம். ஜி-7 மற்றும் ஜி-8 அமைப்புகள் வருங்காலத்தில் இந்தியாவை முறைப்படி சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கும். அந்த நேரத்தில் நான் கூறியதை நம்புவதற்கு பலரிருக்கவில்லை. ஆனால் இன்று அது ஒரு உண்மையாகி வருகிறது. உலக பொருளாதார ஒழுங்கில் இந்தியா தனக்குரிய இடத்தைப் பெற்றிருப்பதாக இங்கிருக்கும் நாங்கள் அனைவரும் நம்புகிறோம்

இந்தியாவின் ஏழை மக்களும் இந்த பயணத்திற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். பிரச்சினை இந்தியாவின் மேல்தட்டு வகுப்பினரிடமும், இந்தியாவின் பலதரப்பட்ட அரசியல் தலைவர்களிடமும் இருப்பதாக தான் நான் கருதுகிறேன். இந்தியாவை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமானால், அந்நாட்டின் ஆழ்ந்த

வரலாற்றிற்குள் நாம் போக வேண்டும் என்று நான் நம்புகிறேன். சமீபத்திய கடந்த காலம் மட்டும் நமக்கு இந்நாட்டின் மேதமை குறித்து அறிந்து கொள்வதற்கு போதுமானதாய் இல்லை. இந்தியாவின், ஏன் உலகத்தின் என்று கூட இருக்கலாம், முதல் ஒழுக்கவியலாளர் தமிழ்ப் புலவர் திருவள்ளுவர் தான். அவர் அதிரடியாக ஒரு விஷயத்தைக் கூறுகிறார்: "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்". 2000 ஆண்டுகளுக்கு முன்னதாக, அவர் நம்மிடம் கூறுகிறார்: "உன்னைத் தவிர வேறு யாரையும் குறை கூறாதே". இந்தியர்கள் தங்களது எதிர்காலத்திற்கு தாங்கள் பொறுப்பேற்பதை விடவும் சக்தி வாய்ந்த விஷயம் எதுவும் இல்லை என்று நான் நம்புகிறேன். இந்தியா@75 ஒரு உலகளாவிய தலைமை நாடாவதற்கு தவறுமானால், அந்த தோல்விக்கான ஒரே காரணம் இந்தியர்களாகத் தான் இருக்க முடியும். வெளியிலிருந்து யாரும் நாம் வெற்றி பெறுவதைத் தடுக்கவில்லை. எனவே இந்த உருமாற்றமானது ஆதாரவளங்கள் குறித்தது அல்ல. ஒரு புதிய இந்தியாவை கட்டுவதில் நமது நம்பிக்கை குறித்தது இது. இந்த இந்தியாவை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியாவிட்டால், அதனை நாம் உருவாக்க முடியாது. கற்பனைத் திறனும் இந்தியாவின் உண்மையான தலையெழுத்தின் மீதான நம்பிக்கையும் தான் நமக்கு தேவைப்படுவது. நமக்குத் தேவைப்படுவது உணர்வுரீதியான ஆர்வம், துணிவு மற்றும் நிச்சயமாக பெரும் அளவிலான மனிதநேயம் மற்றும் பணிவு.

நன்றி.

---

i. திரு. சாம் பிடோரா தலைமையின் கீழ் அறிவுத்துறை கமிஷன் மற்றும் ........ தலைமையின் கீழ் திறன்கள் கமிஷன் ஆகியவை இந்த திசையில் செல்வதற்கான நல்ல துவக்கமாகும்.

ii . C.K. Prahalad: The Fortune at the Bottom of the Pyramid: Eradicating Poverty through Profits, Wharton Publishing, 2004 and

C.K. Prahalad: the Innovation Sand box; Strategy+ Business, 2007

iii. சர்வதேச ஆதாரவளங்களுக்கான பயிலகம்

iv. ஆதாரம்: ஐக்கிய நாடுகளின் மக்கள்தொகை கணக்கெடுப்பு பிரிவு: உலக மக்கள்தொகை புள்ளிவிபரம் 2006

v . 2002 முதல் நான் 10 சதவீத வளர்ச்சி மற்றும் 10 மில்லியன் புதிய பணிவாய்ப்புகள் குறித்து பேசி வருகிறேன்.

vi . சர்வதேச ஆதாரவளங்களுக்கான பயிலகம்